149—

பழனி தொகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை.

*9687—திரு. ஆ. சுப்புரத்தினம் :
மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி தொகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

150—

கல்லாற்றின் குறுக்கே ஏரி கட்டும் திட்டம்.

*9716—திரு. வெ. தமிழரசு :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் வட்டம், ராமநாயக்கன் பாளையம் கிராமம் எல்லையில், பெரியகல்வராயன் மலையிலிருந்து வரும் கல்லாற்றின் குறுக்கே ஐயன்காடு என்ற இடத்தில் உலக வங்கி உதவியுடன் ஏரி ஒன்று கட்டும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ராமநாயக்கன் பாளையம் கிராமத்திற்கருகே கல்லாறு என அழைக்கப்படும் மலையாற்றின் குறுக்கே ஏரி அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்படி திட்டம் உலக வங்கி உதவியுடன் எடுத்துக் கொள்ள முன்மொழிவு எதுவும் செய்யவில்லை. தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அலுவலகத்தில் இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது.